பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

11 10 2025 SATURDAY 6 45 AM

வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று புதுதில்லியில் வேளாண் துறை தொடர்பான 42 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

2. வரவிருக்கும் பண்டிகை காலத்தில் நியாயமான விமான கட்டணங்களை உறுதிப்படுத்துமாறு தனியார் விமான நிறுவனங்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

3. திருப்பரங்குன்றம் மலையில் ஆடு, கோழிகள் பலியிடுவதற்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை விதித்துள்ள தடையை வரவேற்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், புதிதாக 2 லட்சம் இலவச மின்இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு. எம்ஆர்கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

5. 23 வயதுக்குட்பட்டோருக்கான நட்புறவு கால்பந்து போட்டியில், இந்தோனேஷியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று புதுதில்லியில் நடைபெறவுள்ள வேளாண் துறை தொடர்பான நிகழ்ச்சியில் 42 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

குறைவான வேளாண் உற்பத்தியுள்ள 100 மாவட்டங்களில் அடுத்த 6 ஆண்டுகளுக்குள் உற்பத்தி திறனை அதிகரிக்கும் திட்டம் ஒன்றையும் அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

பருப்பு வகைகளில் சுயசார்பை எட்டும் வகையில் இரண்டு திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைப்பதோடு, விவசாயிகளுடனும் கலந்துரையாடவுள்ளார்.

கொள்முதல், இருப்பு வைத்தல், பதனிடுதல் உள்ளிட்டவற்றில் நவீன நடைமுறைகளை பின்பற்ற உதவும் திட்டங்களையும், தானிய சாகுபடி பரப்பை அதிகரிக்கும் முன்முயற்சிகளையும் பிரதமர் தொடங்கி வைக்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

வரவிருக்கும் பண்டிகை காலத்தில் நியாயமான விமான கட்டணங்களை உறுதிப்படுத்துமாறு தனியார் விமான நிறுவனங்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

விமான நிறுவனங்கள் தொடர்பாக புதுதில்லியில் நேற்று நடைபெற்ற மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில் பேசிய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, பயணிகளின் வசதிக்கு தொடர்ந்து முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பண்டிகை கால தேவையை பூர்த்தி செய்ய, போக்குவரத்து நெரில் அதிகமாக உள்ள வழத்தடங்களில் கூடுதலாக விமானங்களை இயக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

விமான நிறுவனங்கள் பாதுகாப்பு நெறிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பயணிகள் தெரிவிக்கும் குறைகளை குறித்த நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்குமாறும் விமான நிறுவனங்களை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

திருப்பரங்குன்றம் மலையில் ஆடு, கோழிகள் பலியிடுவதற்கு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை தடை விதித்துள்ளதன் மூலம் நீதி வென்றுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், இவ்வழக்கில் இரண்டு நீதிபதிகளின் மாறுபட்ட தீர்ப்புக்குப் பிறகு மூன்றாவது நீதிபதி தீர்ப்பளித்துள்ளைதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில், ஆடு, கோழி பலியிடுவதற்கு தடை விதித்ததோடு, திருப்பரங்குன்றம் மலை என்றே அழைக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திருப்பரங்குன்றம் மலையின் மரபுகளை அழிக்கத் துடித்த திமுக அரசுக்கு எதிராக, மதுரையில் நடைபெற்ற முருகர் மாநாட்டில் தமிழகமே ஒன்று திரண்டதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகம் முழுவதும் 12 ஆயிரத்து 480 ஊராட்சிகளில் இன்று கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், காணொலி வாயிலாக இந்த கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

10 ஆயிரம் ஊராட்சிகளில் இதனை நேரடியாக ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியின் முன்னேற்றம், தூய்மை இந்தியா இயக்கத்தின் தற்போதை நிலை, ஊரக பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்டவை தொடர்பாக இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

பிரதமரின் கிராம முன்னோடி திட்டத்தின் கீழ், கிராமத்திற்கான வளர்ச்சித் திட்டத்தை தயார் செய்து, இன்றைய கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், புதிதாக 2 லட்சம் இலவச மின்இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு. எம்ஆர்கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

கோவா மாநிலத்தில் நேற்று நடைபெற்ற தென்னை வளர்ச்சி குறித்த கருத்தரங்கில் பேசிய அவர், மாநிலம் முழுவதும் 24 லட்சம் மின்இணைப்புகளுக்கான 34 ஆயிரம் கோடி ரூபாய் கட்டணத்தை தமிழக அரசு செலுத்தியுள்ளதாக கூறினார்.

பயிர் காப்பீடு மூலமாக இதுவரை 14 லட்சம் விவசாயிகளுக்கு பயிர் சேதத்திற்கான இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கரும்பு உற்பத்தியிலும், துவரை உற்பத்தியிலும் மாநில அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

தென்னை சாகுபடியை ஊக்குவிப்பதற்காக விவசாயிகளுக்கு உயர்ரக தென்னங்கன்றுகளை அரசு வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் அளிக்கும் நெல்லுக்கான கொள்முதல் விலை, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுவதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் குருவை நெல் கொள்முதல் பணிகளை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இம்மாவட்டத்தில் நேற்று வரை ஒரு லட்சத்து 36 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஐந்து இடங்களில் நெல் மூட்டைகளை சேமித்து வைக்க திறந்தவெளி கிடங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தினசரி ரயில் மற்றும் லாரிகள் மூலமாக 8 ஆயிரம் மெட்ரிக் டன் நெல், வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

**>>>>><<<<<**

மாநிலத்தின் கடன்சுமை அதிகரித்தது தான் திமுக அரசின் சாதனை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

ஈரோட்டில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், பெருந்தொற்று காலத்தில் நிதி நெருக்கடி இருந்தபோதும், அப்போதிருந்த அஇஅதிமுக அரசு கடன் வாங்காமல் 40 ஆயிரம் கோடி ரூபாயை செலவிட்டதாக கூறினார்.

அஇஅதிமுக ஆட்சியின் போது, 10 ஆண்டுகளில் 17 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் திறக்கப்பட்டதாகவும், கடந்த நான்காண்டு கால திமுக ஆட்சியில், புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரியை கூட திறக்கவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்

>>>>><<<<<

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, தருமபுரி, சேலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், ஒகேனக்கல் காவிரியாற்றில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – தண்டபாணி 31 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

இருவரிச் செய்திகள்

அமெரிக்க பொருட்கள் மீது சீனா விதித்துள்ள புதிய ஏற்றுமதி கட்டுப்பாடுகள் அதிர்ச்சி அளிப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

இந்தியாவிலிருந்து அமெரிக்கா சென்றுள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற குழு உறுப்பினர்கள் நியூயார்க்கில் இந்திய வம்சாவளியினரை சந்தித்து பேசினர்.

**>>>>><<<<<**

திரிபுரா மாநிலத்தை ஒட்டியுள்ள பங்களாதேஷ் எல்லையில் கடத்தலை தடுக்க எல்லைப் பாதுகாப்பு படையினர் துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் காயமடைந்தார்.

**>>>>><<<<<**

பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸில் எல்லைப் பாதுகாப்புப் படையினரும், மாநில காவல்துறையினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் 3 கிலோ மதிப்புள்ள போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

>>>>><<<<<

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ISI-க்கு முக்கியமான தகவல்களை அளித்ததாக ராஜஸ்தான் மாநிலத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

>>>>><<<<<

கேரள மாநிலத்தில் சிங்கவனம் அருகே ரயில் பாலத்தில் பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்படுவதால், மதுரை - குருவாயூர் விரைவு ரயில் சேவை, கொல்லம் - குருவாயூர் இடையே இன்று ரத்து செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

செகந்திராபாதில், ரயில் பாதை பராமரிப்பு பணிகள் காரணமாக, வரும் 14ஆம் தேதி கோவை - தன்பாத் வாராந்திர சிறப்பு ரயில்சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நீலகிரி மாவட்டத்தில் ரேடியோ காலர் பொருத்தி கண்காணிக்கப்பட்டு வந்த வரையாடு உயிரிழந்ததாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

திருச்சியில் 10 கோடி ரூபாய் மதிப்பிலான தங்க நகைகளை கொள்ளையடித்த 12 பேரை மத்தியப்பிரதேசத்தில் தமிழக காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

23 வயதுக்குட்பட்டோருக்கான நட்புறவு கால்பந்து போட்டியில், இந்தோனேஷியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது

ஜகார்த்தாவில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், இந்தியா 2-1 என்ற கோல்கணக்கில் இந்தோனேஷியாவை வென்றது.

இந்தியாவின் சார்பில் Suhail Ahmed Bhat 2 கோல் அடித்தார்.

>>>>>END<<<<<